# உன் வழிகளெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். சங் 91:11

**உன்னைக் காப்பார்.**

நாளை என்ன நடக்குமோ என்று கண் கலங்கி தவித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**'பயப்படவேண்டாம்.'**

ஜீவனுள்ள தேவனின் வார்த்தை சொல்கிறது,

"**உன்னைக் காக்கும்படி . .**

**தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.**" – என்பதாக.

சங்கீ. 91 : 7 இப்படிச் சொல்கிறது:

**உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. –** என்பதாக.

ஒருமுறை நான் அபுதாபியில் ஊழியம் செய்தபொழுது, அங்குள்ள தமிழ்சபை மக்கள் ஆவியில் நிறைந்து பாடின ஒரு பாடல் என்னுடைய நினைவுக்கு வருகிறது. அந்தப் பாடலையே உங்களுக்கு ஆதாரமாக எழுதுகிறேன்.

சேனைகளின் கர்த்தர் நல்லவரே, சேதமின்றி நம்மை காப்பவரே
சோர்ந்திடும் நேரங்கள் தேற்றிடும் வாக்குகள் சோதனை வென்றிடத் தந்தருள்வார்.
எக்காலத்தும் நம்பிடுவோம் திக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்கபலம் பாதுகாப்பும் இக்கட்டில் ஏசுவே அடைக்கலம்.

எல்லா வகையிலும் சோர்ந்துபோன சகோதரியே,

இந்தப் பாடல் உங்களுக்குத் தெரியுமானால், பாடிக்கொண்டே இருங்கள்; தெரியாவிட்டால் கற்றுக்கொண்டாவது பாடுங்கள். புது நம்பிக்கை பிறக்கும்.

**வேதம் சொல்லுகிறது,**

**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்** – என்பதாக. இந்த ஆசீர்வாதம் உங்களுக்குப் போதாதா?

"**சேதமின்றி உன்னைக் காப்பார்**"

சோர்ந்திடும் நேரங்களிலெல்லாம், தம்முடைய வாக்குத்தத்தத்தை நினைப்பூட்டி உன்னை தேற்றுவார். மேலும் சோதனைகளையெல்லாம் வென்றிட பெலன் தருவார். **இந்த ஆசீர்வாதம் உங்களுக்குப் போதாதா? போதுமானால்,** எக்காலத்தும் கர்த்தரையே நம்பிடுவோம். ஏனெனில், திக்கற்ற மக்களின் மறைவிடம், பக்கபலம், பாதுகாப்புமாக நம் இயேசு இருக்கிறார்.

**எல்லாவற்றைக் காட்டிலும்** இக்கட்டில் ஏசுவே அடைக்கலம் – அல்லேலூயா!

**மேலும், பக்தன் பாடுகிறான்,**

வெள்ளங்கள் புரண்டு மோதினாலும், உள்ளத்தின் உறுதி அசையாதே,
ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும் இயேசு நம்மோடங்கு நடக்கின்றார்.

ஆம், சகோதரனே, சகோதரியே,

வெள்ளங்கள் புரண்டு மோதினாலும், உங்களுடைய உள்ளத்தின் உறுதி அசையாமல் காக்கிற தேவன் இருக்கிறார். ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும், ஏசு உங்களோடு நடக்கிறார். இந்த ஆசீர்வாதம் போதாதா?

காத்திருந்து பெலன் பெற்றிடுவோம்.
**கர்த்தரின் அற்புதம் கண்டிடுவோம்.**
ஜீவனானாலும், மரணமானாலும் நம்
தேவனின் அன்பில் நிலைத்திருப்போம். ஆமென்.

நிச்சயமாகவே "**உன் வாழ்வில் ஒரு அற்புதம் காத்திருக்கிறது**" உன்னைக் காப்பார். ஆமென்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

"பயப்படாதே"

இயேசு நம் யுத்தங்கள் நடத்துவார், ஏற்றிடுவார் என்றும் ஜெயக்கொடி,
யாவையும் ஜெயித்து வானத்தில் பறந்து, ஏசுவை சந்தித்து ஆனந்திப்போம்.

அதுவரையில், உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது.

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி,**
**உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்."** ஆமென்!